# சமூக நலப்பணிகள்

Royal Kingston



## நாங்கள் உதவ முடியுமா?

உங்களுக்கு இந்த சிற்றேடு, ஒலிநாடாவிலோ, கணிணி தட்டிலோ, பெரிய பதிப்பாகவோ அல்லது ப்ரெயில் முறையிலோ வேண்டும் எனில் தயவு செய்து எங்களை கேளுங்கள்.

## நாங்கள் யார்

சமூக நல பணிகள் Kingston னை சேர்ந்த Royal Borough வின் ஒரு பகுதி சில சமயங்களில் அது Kingston அவை என்றும் அழைக்கப்படும். Kingston னை சேர்ந்த Royal Borough, Kingston, Surbiton, Tolworth, Hook, Chessington, New Malden மற்றும் Worcester Park ன் சில பகுதிகளை உள்ளடக்கியது.

## நாங்கள் யாருக்கு உதவுகிறோம்

Kingston னின் Royal Boroughவில் வசிக்கும் நீங்கள் 18 வயதும் அதற்கு மேலுமாயின், உங்களுக்கு நோயினாலோ, உடல் ஊனமுற்றாலோ அல்லது தளர்ச்சியால் பாதிக்கப்பட்டிருந்தாலோ உதவி தேவையானால் நாங்கள் உங்களுக்கு உதவ இயலும்.

குழந்தைகளுக்கும் இளம் வயதினருக்கும் பணிகள் பற்றிய தகவல்கள் வேண்டுமாயின், நாங்கள் யார் உங்களுக்கு உதவ முடியும் என்ற தகவல் அளிப்போம். எக்காரணத்தாலோ, உங்களுக்கு எங்களால் உதவ முடியவில்லையென்றால், உங்களுக்கு உதவக் கூடியவர்களிடம் உங்களை வழி நடத்துவோம்.

## நாங்கள் என்ன செய்கிறோம்

நாங்கள் பல வகையான உதவிகளை ஏற்பாடு செய்ய முடியும். கீழ்கண்டவை உட்பட :

- உங்கள் வீட்டிற்கு தனிபட்ட மற்றும் நடைமுறை உதவி
- உடல் ஊனமுற்றோருக்கு பயணத்தின் போது உதவி
- உங்களுடைய வாழ்கையை எளிதாக்கிட சிறப்பு உபகரணம் அளிப்பது, வீட்டில் தேவையான மாறுதல்களும் செய்வது.
- உறவினர் அல்லது நண்பரை பார்த்துக்கொள்வதற்க்கு உங்களுக்கு ஆதரவு அளிப்பது.
- மருத்துவ மனையிலிருந்து வீட்டிற்கு திரும்புவதற்கு உதவுவது.
- பகல் நடவடிக்கைகள்

- உங்களுடைய வீட்டிலேயே உணவு வழங்கப்படும்
- வீட்டில் தங்கி செவிலியர் பணியாற்றுதல்
- உடல் தளர்ச்சியுற்றிருக்கும் பெற்றோருக்கு ஆதரவு
- ஆலோசனையும் ஆதரவு பணிகளும்
- நீங்களே உங்களுக்கு உதவி செய்து கொள்வதற்கு வேண்டிய நிதி உதவி ஏற்பாடு
- கவனத்தொலைபேசி எச்சரிக்கை முறை
- மேலும் ஏராளமான உதவிகளுக்கு எங்களை தயவுசெய்து அணுகவும்.

## எங்களது பணிகளை உபயோகிக்க என்ன செலவாகிறது

எங்களது பல பணிகளுக்கு கட்டணம் கிடையாது. எந்த பணிகளுக்கெல்லாம் தொகை செலுத்த வேண்டுமோ, அவற்றை பற்றியெல்லாம் உங்களுக்கு தகவல் தெரிவிப்போம். உங்களுக்கு ஏதேனும் நிதிநெருக்கடிகள் இருக்குமாயின், நாங்கள் எங்களால் முடிந்த உதவியை செய்வோம்.

## எங்களை எவ்வாறு தொடர்பு கொள்வது

எங்களது பணிகளைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளவிரும்பினாலோ அல்லது உதவி கோர வேண்டுமானாலோ, தயவுசெய்து எங்களை அணுகவும். நீங்கள் கடித மூலமாகவோ, தொலைபேசியிலோ அல்லது தொலை அச்சுமூலமாகவோ எங்களை அணுகலாம். எங்கள் தொடர்பு விவரங்கள் பின் பக்கததில் உள்ளது.

உங்களால் ஆங்கிலத்தில் பேசவோ, எழுதவோ முடியாதென்றாலோ அல்லது நன்றாக பேசவோ எழுதவோ முடியாதென்றாலோ, நாங்கள் உங்களுக்கு ஒரு மொழி பெயர்பாளரை ஏற்பாடு செய்வோம். எங்களது உதவி உங்களுக்கு தேவையிருந்தால் அல்லது ஏற்கனவே எங்களிடமிருந்து பணிகளை பெற்றுக் கொண்டிருந்தால் இந்த பணிக்காக நீங்கள் எவையும் செலுத்த வேண்யடிதில்லை. மொழிப்பெயர்பாளர் தேவையிருப்பின் அவை உறுப்பினர் மூலமாகவோ அல்லது யாரேனும் ஆங்கிலம் பேசுபவர் மூலமாகவோ எங்களை தொடர்புகொள்ளவும்.

# சமூக நலப்பணிகள்

**Customer Services**
Guildhall 1
Kingston,
Surrey,
KT1 1EU.

தொலைபேசி: 020 8547 6008
**Email:**cust.serv@rbk.kingston.gov.uk
**Website:**www.kingston.gov.uk/communitycareservices

Community Care Services-Tamil

Produced by Kingston Community Care Services
August 2004